DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.232/2023 | Deposition of Witness for : PW2 |
| Name : திரு.நாகராஜன் | Father/Husband Name : |
| Age : | Village : |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03 June 2026.

A1 to A3 absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது நாசரேத் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் திரு.பழனிநாதன் மற்றும் புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் திரு.ராய்ஸ்டன் ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பழக்கம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 30.09.2021 ஆம் தேதி 18.00 மணிக்கு நாசரேத் காவல்நிலைய தலைமை காவலர் பழனிநாதன் என்பவர் நிலையத்தில் இருந்தபோது, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து வந்த வெள்ளமடம், எம்.ஜி.ஆர் நகர் பெருமாள் மனைவி கனியம்மாள் என்பவரது புகார் வாக்குமூலத்தை முதல்நிலை பெண் காவலர் திருமதி.மரிய செல்வி என்பவரிடமிருந்து பெற்று புகார் வாக்குமூலத்தின் தன்மையின்படி நிலைய குற்ற எண்.191/2021, U/s.341, 294(பி), 323, 506(2) இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தார்.

3. முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் காயத்தகவல் மற்றும் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம் அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு.ராய்ஸ்டன் அவர்களின் பார்வைக்கும் வைத்தார்.

4. இந்த வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் திரு.ராய்ஸ்டன் 30.09.2021 ஆம் தேதி 19.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆல்வின், ராஜீவ்காந்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அவர்கள் இருவரையும் விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

5. சாட்சிகள் கனியம்மாள், முருகன், மூக்கம்மாள், மகாராஜன், முத்துராஜ், ஆல்வின், ராஜிவ் காந்தி, மருத்துவர் சிவகுமார், மரிய செல்வி, தலைமைக்காவலர் பழனிநாதன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.03 17:53:38 +0530

வாக்குமூலம் பதிவு செய்தார்.

6. இவ்வழக்கின் 1 ஆவது எதிரி ராஜாம்மாள், 2 ஆவது எதிரி லெட்சுமி, 3 ஆவது எதிரி ஜெயசூர்ய பிரகாஷ் என்ற சூர்யா ஆகியோர்களை 07.10.2021 ஆம் தேதி 18.15 மணிக்கு நாசரேத் சந்தியில் வைத்து காரணம் கூறி கைது செய்து, பின் அவர்களை நிலைய ஜாமீனில் விடுவித்தார்.

7. இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 கனியம்மாளுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.சிவக்குமார் என்பவரை விசாரித்து அவர் வழங்கிய காயச்சான்றிதழ் கிடைக்கப்பெற்றார். அவரை தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அ.சா.1 கனியம்மாளுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று மருத்துவர் சான்று வழங்கினார்.

8. வழக்கின் சட்டப்பிரிவை இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 323, 506(2) என்பதை இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2) ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை தாக்கல் செய்தார்.

9. அவருடைய விசாரணையில் இருந்தும், சாட்சிகள் வாக்குமூலங்களிலிருந்தும் வழக்கு சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது 06.04.2023 அன்று இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2) ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5, அ.சா.1 ன் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

10. பொய்யான புகார் வாக்குமூலம் பெற்று எதிரிகளுக்கு எதிராக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து எதிரிகளுக்கு எதிராக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.03 17:53:44 +0530

Judicial Magistrate, Sathankulam.